**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை :– திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**

––––

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 03 நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண். 2/2022 ல் இடைமனு எண். 5/2024**

பாஸ்கர் ..மனுதாரர் / முதல் எதிர்வாதி

..எதிர்..

கிருஷ்ணமூர்த்தி .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். கார்த்திக்கேயன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் வாதியின் வழக்கை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையில் நடைமுறைச் சட்டம் கட்டளை 7, விதி 11 மற்றும் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கின் முதல் எதிர்வாதி. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர் மீதும், அசல் வழக்கின் 2 ம் எதிர்வாதியின் மீதும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் பிராதில் வழக்கிற்கு தொடர்பில்லாத நிலங்களை நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்தில் கூறியுள்ளார். மனுதாரரின் தந்தை சீதாராமன் புல எண்.10/1 ல் 8 1/3 செண்ட நிலத்தை சிந்தாமணி என்பவரிடமிருந்து முறையாக ஆவணம் மூலம் பெற்று அதை குத்தகை உரிமை பதிவு அலுவலர் உத்தரவுப்படி குத்தகை உரிமை பதிவேட்டிலும் 30.06.2010 ல் நி.மு.கு.உ.ப. எண்.14/2010/ஆ 2 படி

பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிவை எதிர்த்து வாதி மனுதாரரின் தந்தை சீதாராமனுக்கு எதிராக தனித்துணை ஆட்சியர் மற்றும் வருவாய் நீதிமன்றத்தில் கு.உ.ப.மே.மு எண்.1/2010 ல் மேல்முறையீடு செய்து, அது தகுதியின் அடிப்படையில் முழு விசாரணைக்கு பிறகு 12.03.2013 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் மீது வாதி இரண்டாம் மேல்முறையீடு செய்யாமல் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார். வழக்கு மூலமே ஏற்படாத நிலையில் கற்பனையான வழக்கு மூலத்திற்காக 20.03.2021 அன்று மனுதாரர் சொத்தை ஆக்ரமிக்க எத்தனித்ததாக ஜோடித்து கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த வழக்கு உ.வி.மு.ச பிரிவு 11 ன் படி Resjudicate அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்தைப் பொருத்து மனுதாரர் கிரய முன்னோரான சிந்தாமணியிடம் தங்கவேல் முதலியார் என்பவர் இடையூறு செய்ய முற்பட்டதால் சிந்தாமணி, சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.109/1990 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து, அது சிந்தாமணிக்கு ஆதரவாக விசாரணைக்கு பின்பு தீர்ப்பாகி உள்ளது. 7. வாதி அதை மறைத்து தங்கவேல் முதலியாரிடமிருந்து சொத்தை பெற்றுள்ளதாக கூறி தந்தை சீதாராமன் மீது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் சோரி சிகரழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ. எண். 123/2001 என்ற வழக்கை தாக்கல் செய்து அதுவும் முழு விசாரணைக்கு பிறகு வாதிக்கு பாதகமாக தள்ளுபடியாகி விட்டது. அதன் மீது வாதி சமூகம் நீதிமன்றத்தில் ஏ.எம். 158/2004 என்ற வழக்கை தாக்கல் செய்து அதுவும் விசாரணைக்கு பிறகு வாதிக்கு பாதகமாக தள்ளுபடியாகி விட்டது. நீதிமன்றத்தையும் சட்ட நிலைபாடுகளையும் ஏமாற்றும் நோக்கத்தில் இந்த வழக்கில் குத்தகைதாரர் என்ற விளம்புகை வாதி கோரியுள்ளார். அதன் பின்னர் வாதி, மனுதாரரின் தந்தை மீது சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ. எண். 39/2010 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து, அதுவும் தள்ளுபடி ஆகி விட்டது. எனவே இந்த வழக்கு முன் வழக்கு தீர்ப்புகளால் (ResJudigatta) அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ளதால் அடிப்படையிலும் வழக்கை நிராகரிக்க வேண்டி இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

3. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரரின் மனு சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பாக பொய்யான காரணங்களை கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பில்

விசாரணை தொடங்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கியுள்ள நிலையில் அசல் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதல் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்புமில்லை. மனுதாரர் தாக்கல் செய்துள்ள 12.03.2013 ம் தேதியிட்ட வாருவாய் நீதிமன்ற உத்தரவு வாதிக்கும், சீதாராமன் என்பவருக்கும் இடையே நிறைவேற்றப்பட்ட வழக்கு ஆகும். அதில் மனுதாரர் தரப்பினர் இல்லை. . வழக்கு சொத்தில் எவ்வித உரிமையையும் இல்லாத சிந்தாமணி என்பவர் மனுதாரரின் தந்தைக்கு குத்தகை உரிமை மாற்று பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னிட வழக்குகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. மேற்படி வழக்குகளில் மனுதாரர் தரப்பினர் இல்லை. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள் இவ்வழக்கின் தாவா சொத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை. வழக்கு சொத்து காலி மனையாக இருந்து வருவதாகவும், மனுதாரர் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யக்கோரியுள்ளார்.

4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**5. தீர்வு.**

மனுதாரர் தரப்பில் வாதியின் வழக்கை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கின் முதல் பிரதிவாதி என்றும், வாதி அசல் வழக்கை பதிவு பெற்ற குத்தகைத்தாரர் என்று விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரரின் தந்தை புல எண்.10/1ல் 8 1/3 செண்ட் நிலத்தை சிந்தாமணி என்பவரிடமிருந்து முறையாக ஆவணம் மூலம் பெற்று குத்தகை உரிமை பதிவு அலுவலர் உத்தரவுப்படி குத்தகை உரிமை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி பதிவை எதிர்த்து மனுதாரர் தந்தைக்கு எதிராக வருவாய் நீதிமன்றத்தில் வாதி மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் மீது 2 வது மேல்முறையீடு தாக்கல் செய்யாமல் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வருவாய் நீதிமன்றத்தில் குத்தகை உரிமையைப் பொருத்து

குத்தகை உரிமை பதிவு அலுவலரும், குத்தகை உரிமை மேல்முறையீட்டு நீதிமன்றமும் முழு விசாரணைக்கு பிறகு தீர்ப்பு வழங்கி விட்ட நிலையில் இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு எவ்வித உரிமை மூலமும் இல்லை என்றும், உரிமையியல் நீதிமன்றத்தில் வாதி வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றும், வாதியின் வழக்கில் வழக்கு மூலம் இல்லை என்றும், Resjudicata அடிப்படையில் CPC பிரிவு 11ன் படி முன் தீர்ப்பு தடையால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டு உள்ளதாகவும், வாதியின் கிரய முன்னோர்கள் தங்கவேல் மற்றும் மனுதாரரின் கிரய முன்னோர் சிந்தாமணி ஆகியோர்களியோர் முந்தய வழக்கில் மனுதாரர் கிரய முன்னோருக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் தந்தை மற்றும் தங்கவேல் முதலியார் இடையே ஏற்பட்ட அசல் வழக்கு மற்றும் மேல்முறையீட்டு வழக்கு மனுதாரர் தரப்புக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றும், வாதி மனுதாரரின் தந்தை மீது தாக்கல் செய்த அசல் வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே முன் தீர்ப்பு தடை சட்டத்தின் அடிப்படையில் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதால் வாதி வழக்கை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

7. எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் அசல் வழக்கில் வாதி தரப்பில் விசாரணை தொடங்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கியுள்ள நிலையில் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், முதல் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்புமில்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள 12.03.2013ம் தேதியிட்ட வாருவாய் நீதிமன்ற உத்தரவு வாதிக்கும், சீதாராமன் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட வழக்கு என்றும், அதில் மனுதாரர் தரப்பினர் இல்லை என்றும், வழக்கு சொத்தில் எவ்வித உரிமையையும் இல்லாத சிந்தாமணி என்பவர் மனுதாரரின் தந்தைக்கு குத்தகை உரிமை மாற்று பத்திரம் எழுதி கொடுத்துள்ளதாகவும், மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முந்தைய வழக்குகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், மேற்படி வழக்குகளில் மனுதாரர் தரப்பினர் இல்லை என்றும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வீட்டுவரி ரசீதுகள் இவ்வழக்கின் தாவா சொத்திற்கு தொடர்பு இல்லாதவை என்றும், வழக்கு சொத்து காலி மனையாக இருந்து வருவதாகவும், மனுதாரர் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள

இம்மனுவை தள்ளுபடி செய்யக்கோரியுள்ளார்.

8. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பில் அசல் வழக்கின் வழக்குரையை நிராகரிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வாதி தரப்பு வழக்குரை சங்கதிகளின் அடிப்படையிலேயே இம்மனுவிற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதாலும், அசல் வழக்கில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு தங்கவேல் முதலியாரிடமிருந்து வாதி பெற்ற வழக்கு சொத்து மற்றும் இதர சொத்து குறித்த குத்தகை உரிமை மாறுதல் பத்திரம் மற்றும் வாதி பெயரில் குத்தகை உரிமையை மாற்றம் செய்து சீர்காழி, குத்தகை உரிமை பதிவு அலுவலர் மற்றும் வட்டாட்சியர் வழங்கிய செயல்முறை உத்தரவு ஆகியவை வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவே இவ்வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதும், வாதியின் வழக்கில் வழக்கு மூலம் உள்ளதா என்பது குறித்தும் தீர்வு காண இயலும் என்பதால் மனுதாரரின் மனுவில் எவ்வித நற்கூறுகளும் இல்லை என்று தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9. **முடிவாக, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை**.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 03ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.03 17:28:34 +0530

சார்பு நீதிபதி.
சீர்காழி

<u>**பின் இணைப்பு**</u>

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>** – இல்லை–

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | மயிலாடுதுறை வருவாய் நீதிமன்ற தனித்துணை ஆட்சியர் மற்றும் குத்தகை உரிமை மேல்முறையீட்டு முன்னிலை அலுவலர் நடவடிக்கை கடிதம் நகல் |
| ம.சா.ஆ.2 | -- | சிந்தாமணி செய்து கொடுத்த கிரய பத்திரம் நகல் |
| ம.சா.ஆ.3 | - | சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.109/1990 என்ற வழக்கின் தீர்ப்பாணை சான்று |
| ம.சா.ஆ.4 | - | சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.39/2020 என்ற வழக்கின் தீர்ப்பாணை சான்று |
| ம.சா.ஆ.5 | -- | சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.123/2001 என்ற வழக்கின் தீர்ப்புரை சான்று |
| ம.சா.ஆ.6 | - | மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண்.158/2004 என்ற வழக்கின் தீர்ப்புரை சான்று |
| ம.சா.ஆ.7 | -- | பொது தகவல் அலுவலர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் நாகப்பட்டிணம் வழங்கிய நடவடிக்கை கடிதம் |
| ம.சா.ஆ.8 | -- | சொத்து வரி ரசீது |
| ம.சா.ஆ.9 | - | வீட்டு வரி ரசீது |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை–

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.03 17:28:40 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

நேரிய / வரைவு உத்தரவு
இ.ம.எண்.5/2024–ல்
அசல்வழக்கு எண்.2/2022
நாள் –03.01.2026